335

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 OCT 1949
MADRAS

335
4-49

தருமபுர ஆதீன சமயப்பிரசாரவாகன

முதல் ஆண்டு அறிக்கை

1948—49.

பிரசாரவாகன வெள்ளோட்டவிழா.

Q2:38·21193.5 N48.
N50.

தருமபுர ஆதீனம்

வெளியீடு எண். 206.

உ

குருபாதம்

தருமபுர ஆதீன மடாலய, தேவாலய

சமயப்பிரசாரவாகன முதலாண்டு அறிக்கை

1948—49.

பிரசாரவாகன ஸ்தாபகர்:

தருமபுர ஆதீனம் உ௬-வது மகாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்கள்.

பிரசாரகோஷ்டித் தலைவர்:

ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

(வேளூர் தேவஸ்தான கட்டளை விசாரணை)

தருமபுர ஆதீனம்.

1949.

பிரதிகள் 500.

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமபுரம்.

MADRAS

தருமபுர ஆதீன சமயப்பிரசாரவாகன

முதல் ஆண்டு அறிக்கை

1948—49.

தொடக்கவுரை:

எல்லா நாடுகளும், மனிதனை மனிதனுக்கும் முயற்சியில் முன்னேறி வேலைசெய்வதாக எண்ணிக்கொண்டு, இயந்திர சக்தியின் அடிமைகளாக - அணுக்குண்டுகளின் அடிவருடிகளாக - பொருளாதாரப் புயற்காற்றின் தூசிகளாக ஆகிக்கொண்டு வருகின்ற காலத்திலே, அமைதி - அமைதியால் ஆளும்வன்மை, அன்பு - அன்பால் மனிதனோடு மனிதனுக்கு உண்டான உறவு, அருள் - அருளால் விளைந்த தெளிவு, கடவுள் தன்மை - அதனால் விளைந்த தெய்வீக வாழ்வு, இவற்றை உடையதாக இருந்த ஒருநாடு நமது பாரதநாடு. நாம் இயந்திரசக்திகளுக்கு அயல்நாடுகளை நோக்குவது போல, எல்லா நாடுகளும் ஆத்மீகவாழ்வுக்கு நம்மையே எதிர்நோக்கி இருக்கின்றன என்பதை அறியாத சரித்திர ஆராய்ச்சியாளர்கள் யாரும் இருக்கமுடியாது. இது பழம்பெருமை.

இன்றைக்கோ!

நமது பழமையான தெய்வீகக்கலை, அயல்நாடுகளின் பொருட்கலையோடு போராடி அஞ்ஞாதவாசம் செய்ய ஆரம்பித்தது. பாண்டவர்கள் அஞ்ஞாதவாசம் செய்தது ஒரு வருஷந்தான். இராமன் ஆரண்யவாசம் செய்தது கூட பதினன்கு வருஷந்தான். ஆனல், நமது தெய்வக் கலையாகிய சமயநிலை அல்லது மத வுணர்ச்சி, பன்னெடு நாட்களாக அஞ்ஞாதவாசம் செய்யத் தொடங்கிவிட்டது. அதனல் நாடு தன்பெருமை இழந்தது. அமைதிகெட்டது. இன்பம் இல்லையாயிற்று. வாழ்க்கை பெரும்பூசலாய் முடிந்தது. தெய்வத்தன்மை வளர்ந்தநாட்டிலே மிருகத் தன்மை வளர்வதாயிற்று.

அன்றைக்கு:

ஞானசம்பந்தர் இசையால் தமிழ் பரப்பினர். இறை ஒளியை எங்கும் விளக்கினர். அப்பரும் அப்படியே. சுந்தரர் தோழராய் தோழமையாலும் தொண்டுசெய்யலாம் என்பதை விளக்கினர். நம்மாழ்வாரும், பெரியாழ்வாரும், கோதையாரும் தோன்றினர்கள். இசைத்தமிழால் இறையொளி எங்கும் பரவிற்று. அரசியல் வானத்திலே ஒரு பாரதியார் தோன்றி பிரிந்துகிடந்த இந்தியாவை ஒன்று சேர்க்கவில்லையா?

ஆத்மீக வாழ்வால்தான் அரசியல் வாழ்வு நிலைக்கும் என்பதை, உயிரைத்தியாகம் செய்து, ஒரு உத்தமக் காந்தி விளக்கவில்லையா? ஒரு உண்மையான ஆத்மஞானிதான்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
31 OCT 1949
MADRAS

உயர்ந்த கவிஞனாக ஆகமுடியும் என்று ஒரு தாகூர் சொல்லவில்லையா? அத்தகைய மதவுணர்ச்சியை - ஆன்மஞான வளர்ச்சியை இந்தியா இழக்குமா? இழக்கத்தான் முடியுமா?

எல்லோரும் விரும்பினார்கள்:

பழங்காலப் பெருமை தளராமல் பாதுகாப்பது எப்படி என்று ஒவ்வொரு அரசியல் ஞானியும், சமயஞானியும் எண்ணினார்கள். ஒருவரை ஒருவர் குறைகூறிக்கொண்டார்கள். ஆனால் சமயநிலை வளர்ந்தபாடில்லை. நோய்கண்ட குழந்தையைப் போட்டுக்கொண்டு, நோயின் காரணத்தைப் பெரியவைத்தியர்கள் ஆராய்ந்து என்னபயன்? பிழைக்க வைக்க வழிதேட வேண்டியதுதானே முதல்வேலை.

நமது சமயநிலை, ஊசிக்காந்தம்போல இருந்த இடத்திலிருந்தே, எல்லா மாந்தர்களையும் கூட்டி, தத்வஞானத்தை ஊட்டிவந்த காலம் போக, இன்றைக்குப் போய்ப்போய், மக்களுக்கு அவகாசம் கிடைத்தநேரங்களிலெல்லாம் சமய அறிவைச் சிறிதுபரப்பும் நிலைக்கு வந்திருக்கிறது. அதனை நமது தருமையாதீனம் முதன்முதல் அதாவது சுமார் 12 வருஷங்களுக்குமுன்பே உணர்ந்து, விசேஷமாக ஜனங்கள் கூடும் விழாக்காலங்களில் கோயில்களில் தக்க பிரசங்கிகளைக்கொண்டு சமயப்பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தது.

மடத்திலேயே திருவாளர்கள் வடிவேலு செட்டியார், பாலசுந்தர நயினார், பவாநி குமாரசாமிப் பிள்ளை, குமார. ஞானசம்பந்தம் பிள்ளை முதலியோர்கள் ஆதீனப் பிரசார

கர்களாக நியமிக்கப்பட்டுத் தொண்டு செய்துவந்தார்கள். அப்பணியில் இப்பொழுது இருப்பவர், திரு. மீ. சுந்தரம் பிள்ளை அவர்கள்.

சுவாமிநாத பண்டிதரவர்களும், பால்வண்ண முதலியார் B. A. அவர்களும், ப. அ. முத்துத்தாண்டவராயப் பிள்ளை அவர்களும், காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A. அவர்களும், ப. அ. சோமசுந்தரம் பிள்ளை M. A. L. T., அவர்களும் ஆதீன மகாவித்துவான்களாக இருந்து சமயப் பணி செய்துவந்தார்கள். பல நூல்களையும் வெளியிட்டு வந்தார்கள்.

இப்பொழுது ஒன்பது ஆதீன வித்துவான்களும், ஒவ்வொரு துறையில் சிறந்த பல புலவர் பெருமக்களும் பங்கெடுத்துச் சமயப்பணி புரிந்துவருகின்றார்கள்.

இதுகாறும் சமயப்பணிக்கென்றே ஆங்கிலத்திலும் தமிழிலும் வடமொழியிலுமாக 205-நூல்கள் வெளிவந்துள்ளன. அவைகள் தமிழுலகத்தால் மிகமிக வரவேற்கப் படுகின்றன என்பதைப் பத்திரிகைகளின் மதிப்புரைகளாலும், பலரும் பலமுறை விரும்புவதாலும் அறிகிறோம். அதனால் அந்தப்பணியில் மிக ஊக்கத்துடன் முன்னேற எங்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் ஆவன செய்து வருகின்றார்கள். இவை ஆதீனம் சமயவளர்ச்சிக்கென்றே மேற்கொண்டு வருகிற பணிகள்.

இப்பொழுது காலநிலைக்கேற்ப - மக்களுடைய மன நிலைக்கேற்ப ஜில்லாக்கள்தோறும், நகரங்கள் தோறும்,

சிறு கிராமங்கள்தோறும் பிரசாரகர்களை அனுப்பி ஆங்காங்குமுள்ள எல்லா மக்களுக்கும் சமய ஞானஉணர்ச்சி ஏற்படச் செய்யவேண்டும் என்ற பெருநோக்கங் கொண்டு தான் **இப்பிரசாரவாகனம்** ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

பிரசாரவாகன வெள்ளோட்ட விழா:

ஆதீன ஸ்தாபகராகிய குருஞானசம்பந்த சுவாமிகள் குருபூஜை நன்னாள் 28—5—48 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. மூன்று இடங்கள் திட்டஞ்செய்யப்பட்டு இருந்தன. 1. சீகாழி சட்டநாதராலய பிரசாரமண்டபம். 2. வைத்தீஸ்வரன்கோயில் வைத்தியநாதசுவாமி ஆலயத்தின் முன்னுள்ள கொட்டகை. 3. மாயூரம் துலாக்கட்டம். ஆங்காங்கும் முன்னறிவிப்பாகத் துண்டுப் பிரசுரங்கள் போட்டு விநியோகிக்கப்பட்டன.

மாலை 3-மணிக்கு ஒலிபெருக்கி சாதனத்துடன் பிரசாரவாகனம் மலர்மாலைகளால் அலங்கரிக்கப்பெற்று ஸ்ரீ ஞானபுரீசுவரராலயத்தின் திருமுன்னின்று புறப்பட்டது. ஆதீனத் திருக்கூட்டத்து அடியார்கள், புலவர் பெருமக்கள், ஆதீன ஓதுவார்கள், ஆதீனத் தேவார பாடசாலை மாணவர்கள் ஆகியோர்கள் குருலிங்கசங்கம வழிபாடு என்ற முறையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தைக் தரிசித்து, ஸ்ரீ ஞானபுரீசுவரரையும் வழிபட்டு, ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகளையும் பணிந்து வாகனத்தில் அமர்ந்தார்கள். வாகனம் மாயூரம் மாயூரநாத சுவாமி ஆலயத்தை வலமாகவந்து 4-மணிக்குச் சீகாழி

ஆலயத்தை அடைந்தது. எதிர்பார்த்துக்கொண்டிருந்த தக்கார் பலர் வரவேற்ருர்கள். யாவரும் ஆலயவழிபாட்டை முடித்துக்கொண்டு பிரசாரமண்டபத்தில் அமர்ந்தார்கள். திருமுறை முழக்கத்துடன் கூட்டம் தொடங்கப்பெற்றது. வேளூர் கட்டளை விசாரணை, ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் தொடக்கவுரை கூற, திருக்கடவூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத். கந்தசாமித்தம்பிரான் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அருளிய ஆசியை வாசித்தார்கள். அச்சிட்ட அவ் ஆசியுரை அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அவ் **ஆசியுரை** வருமாறு:—

"நம் நாடு தெய்விக நாடு. எவ்விதத் துன்பம் வந்த காலத்தும் பெருநன்மை வந்த காலத்தும் எல்லாம் இறைவனது திருவருள் என்றே நம் பெரியோர் கொண்டனர். அந்த நினைவு இன்றும் போய்விடவில்லை. ஆனுல் முன்பு இருந்ததைவிட இப்பொழுது கொஞ்சம் குறைவுற்றுள்ளது என்பது மாத்திரம் யாவரும் உணர்ந்து வருவதொன்று. மனித நாகரிகம் மேன்மையடையுங்காலத்தில்தான் கடவுள் அறிவும் மிகும். சமீப யுத்தத்தின் விளைவாக இப்பொழுது மனித உணர்வு குன்றியிருக்கின்றன. அதனுலேயே நாட்டில் சண்டையும் பூசலும் மிகுத்துக் காண்கிறது. அவ்வுணர்வு மறைந்து மனித மேன்மை வெளிப்படவேண்டும். அப்பொழுதுதான் சகோதர உணர்ச்சியும் விட்டுக்கொடுக்கும் மனேபாவமும் வளரும். நாடும் செழிப்புறும். அதற்காக இன்று நம்நாட்டுத் தலைவர்கள் பெரிதும் முயன்று வருகிருர்கள்.

இவ்வாதீனம் நீண்டகாலமாகவே மக்களிடையே சமய உணர்ச்சி குன்ருது ஒளிருவதற்காகப் பெருந்தொண்டு செய்து வருவது யாவரும் அறிந்ததே. நம் நாட்டிலே சமய முன்னேற்றத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்குமாக மகாத்துமா காந்தியடிகள்

தம்முடைய ஆருயிரையே தியாகம் செய்து தெய்விகமுற்ருர்கள். எப்பொழுதுமே தென்னுடு அறிவு முன்னேற்றத்திற்குப் பேர் பெற்றது. சமுகத்துறையிலும் நம் நாட்டின் தென்பகுதி சகிப்புத் தன்மை பெருக்கிக்காட்டியது. அதேபோல சமுக முன்னேற்றத்திலும் முன்னணியில் நின்று வழிகாட்டியது. ஹரிஜன மக்கள் முன்னேற்றத்தில் விசேஷ ஆர்வம் காட்டியது. திருக்கோயில்கள் எல்லாவற்றையும் திறந்துவிட்டுச் சமய வழியிலும் அவர்களுக்கு முற்போக்குக்காட்டியது. அவ்வழியில் இவ் ஆதீனம் முன்னணியில் நின்று வழிகாட்டியது இன்றும் நம் மக்கள் அகக்கண்முன் இருக்கும். திருக்கோயில்களைத் திறந்துவிட்ட நாம் அகக்கோயில்களையும் திறக்க வழிசெய்து இன்புறுவோமாக. இவ்வாதீனம் அறிஞர்களைக் கொண்டு அறிஞர் பலர் கூடிய சபைகளிலும் இதுவரையும் சமய உணர்வுள்ள மக்களிடத்தும் பிரசாரம் நடத்திவந்ததும் யாவரும் அறிந்ததொன்று. அப்பிரசாரங்கள் எல்லாம் ஆதீனத் திருக்கோயில்களிலும், விரும்பியழைக்கும் சங்கங்களிலுமாக நடத்தப்பெற்றன. அதனுல் ஒரு குறிப்பிட்ட இடங்களைத் தேடிவரும் மக்கள் மாத்திரம் பயன்பெற்ருர்கள், ஆனுல் இன்றும் மக்கள் கூடும் இடங்களில் நாடுமுழுவதும் சென்று பிரசாரம்செய்து யாவரும் அந்த நன்மையை அடைந்து உய்யவேண்டுமென்பது நமது விருப்பம்.

இந்தப் பிரசாரவாகனம் இன்று பிரசாரவேலைக்கு வெள்ளோட்டம் விடப்படுகிறது. முதன்முதல் திருஞானசம்பந்தர் திருமுலைப் பால் அருந்தி ஞானசம்பந்தம்பெற்ற தலமாகிய சீகாழியம்பதியில் தொடங்கிச் சுற்றுப்பிரயாணம் செய்யும். அன்பர்கள் அனைவரும் இதனைப் பயன்படுத்திக் கொள்வார்களாக. இதில் நம் ஆதீனத்துத் தம்பிரான் ஒருவரும், பிரசாரகர்களும், ஓதுவார்களும் செல்வார்கள். ஆங்காங்கும் கடவுள்பக்தி பெருக, சமய அடிப்படை உண்மைகளையும், சமய ஒழுக்கமுறைகளையும், வழிபாட்டு முறைகளையும் பொது நிலையில் எடுத்துச்சொல்வார்கள்.

சமயஞானம் பெருகி, நாடுசெழித்து, மக்கள் நலம்பெருகி வாழ இறைவன் திருவருள் துணைசெய்வதாக''

பின்னர் நாகர்கோயில் 'தொண்டன்' ஆசிரியர் பண்டிதபூஷணம், திரு. கே. ஆறுமுக நாவலரவர்களும் குடந்தை, வித்துவான், திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் பிரசாரவாகனம் ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தையும், அவசியத்தையும் எடுத்துமொழியத் திருமுறை முழக்கத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. யாவருக்கும் சிற்றுண்டி அளிக்கப்பட்டது. புகைப்படமும் எடுக்கப்பட்டது.

மணி 4-45. பிரசாரவாகனம் புள்ளிருக்குவேளூர் ஆலயத்தின் முன்னுள்ள கொட்டகைக்கு வந்துசேர்ந்தது. ஆங்கும் அன்பர்கள் கூட்டம். ஒலிபெருக்கி சாதனம் சேய்மையில் நிற்கின்ற மக்களைக்கூட அருகில்வரச்செய்தது ஆலயவழிபாட்டின்பின் திருமுறை முழங்க, கூட்டம் தொடங்கிற்று. மேற்கூறப்பட்ட இரு அடியார்களும், த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களும் விரிவுரை நிகழ்த்தினார்கள். விரிவுரைக்கு முன்னர் சீகாழி ஆசிரியர், திரு. சுப்பிரமணிய ஐயரவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் ஆசியுரையை வாசிக்க முன்போல் இங்கும் யாவர்க்கும் வழங்கப்பட்டது. இங்கும் புகைப்படம் எடுக்கப்பட்டது.

மணி 5-45. அன்பர்கள் பலர் முன்னறிவிப்பின்படி மாயூரம் துலாக்கட்டத்தில் குழுமியிருந்தனர். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அம்மக்களின் மன வேகம்போல் பிரசாரவாகனமும் வேகமாகத் துலாக் கட்டத்தை அடைந்தது. காவிரியாற்று மணலிலும் பெருங்

கூட்டம். அந்த நேரம் 'மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும் வீங்கிள வேனிலும் மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை இணையடி நீழலே' என்றருளிய அப்பர் திருவாக்கினைச் சிந்திக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. அடியார்களும் புலவர் பெருமக்களும் காவிரியாற்றின் நடுவில் பிரசங்கியார் நின்று பேசுதற்கென அமைக்கப்பட்ட இடத்தை அடைந்தனர். தக்க இன்னிசைக் கருவிகளுடன் கூடி எழுந்த திருமுறை முழக்கம் மக்கள் மனத்தில் சமய உணர்ச்சியை எழுப்பியது. ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் முன்மொழிய, ஸ்ரீமத் கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள் முன்போல் ஆசியுரை படித்தார்கள். பண்டிதபூஷணம், திரு. கே. ஆறுமுக நாவலரவர்கள் சைவசமயச் சிறப்பினை எடுத்துரைக்கு முகத்தால், பிற மதவாதிகள் எடுத்துரைக்கும் வினவை எழுப்பிக்கொண்டு அதற்குப் பல ஆதாரங்களைச் சான்றுடன் எடுத்துச் சொல்லிச் சுமார் ஒன்றரைமணி நேரம் கம்பீரமாகச் சொற்பெருக்காற்றியது கன்மனமுடையாரையும் கரைந்துருகச் செய்தது. வெள்ளோட்ட விழாவை முன்னிட்டுச் சீகாழி ஆலயத்திலும் புள்ளிருக்குவேளூர் ஆலயத்திலும் செய்வித்ததுபோல் இங்கும் காசி ஸ்ரீ விசுவநாதசுவாமி ஆலயத்திலும், வள்ளலார்கோயில் ஸ்ரீ வதான்யேசுவரர் ஆலயத்திலும் அருச்சனை வழிபாடு நிகழச்செய்து அடியார்களுக்கும் புலவர் பெருமக்களுக்கும் கூட்டத்தொடக்கத்தில் விபூதிபிரசாதம் வழங்கச்செய்யப் பெற்றது. ஆசியுரையும் நல்வழி வெளியீடும் இங்கும் வழங்கப்பட்டன. திருமுறை ஒலிக்கக் கூட்டம் முடிந்தது. அங்கிருந்து புறப்பட்ட மோட்டார்வாகனம் ஹரஹர

முழக்கத்துடனும், சிவபுராண முழக்கத்துடனும் ஆதீன மடாலயத்தை அடைந்தது. யாவரும் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு அன்றையவிழா ஒருவாறு நிறை வெய்தியதாக எண்ணிக் களிப்புற்றனர்.

பிரசாரத் தொடக்கவிழா.

3—7—48 மாலை ஐந்து மணிக்குச் சமயப் பிரசார சுற்றுப் பிரயாணத் தொடக்கவிழா ஸ்ரீ கபாலீசுவரசுவாமி கோவில் கிழக்கோபுரவாயில் பதினாறுகால் மண்டபத்தில் நடைபெற்றது. குறிப்பிடத்தக்க கனதனவான்களும் ஏனை யோருமாகப் பெருங்கூட்டம் கூடியிருந்தது. அப்போது ஆதீன தேவார ஆசிரியர்களும் மாணவர்களும் தக்க பக்க வாத்தியங்களுடன் தேவார இன்னிசை யோதினார்கள், பின்னர் திருப்புகழ்மணி, பிர்மஸ்ரீ, T. M. கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் முருகன் புகழ்மாலையும் விநாயக வணக்க மும் இன்னிசையுடன் ஓதிப் பொருள் விரித்துரைத்தனர்; அனைவரையும் பக்தியில் பரவசப்படும்படி செய்தார்கள். பின் வேளூர்க் கட்டளை விசாரணை சோமசுந்தரத்தம்பிரான் அவர்கள் பதி உண்மையும் பதி இயல்பும், பதியை உணர்ந்து அவர்கள் நிற்கவேண்டிய இன்றியமையாமையும்பற்றி விரிவாக ஞானசாத்திர மேற்கோள்களுடன் பேசினார்கள். பின் கடவுள் உணர்ச்சி கல்வியையே அடிப்படையாகக்கொண்ட ...கலின் அடிப்படைச் சீர்திருத்தத்திற்குக் கல்வியமைச்சர் தலைமை தாங்குவதே மிகப்பொருத்தம் என்றும், அமைச்ச ரவர்களும் திருவருள் வாய்ப்பாகவே இத்தகைய பணிகளில்

ஈடுபட்டுவருகிறேன் என்று சொன்னது அவர்கள் இத் தகைய ஞானத்தொண்டிற்குச் சுவாமிகளே மிகப்பொருத்த மானவர் என்பதைக் காட்டுகிறது என்றும், சென்னை யரசாங்கக் கல்வியமைச்சர் கனம், அவிநாசிலிங்கம் அவர் களையே பிரசாரச் சுற்றுப்பிரயாணத்தைத் தொடங்கி வைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன் என்றும் பேசி னார்கள்.

பின்னர்க் கல்வியமைச்சர் அவர்கள் தொடங்கிவைக் கும் முறையில் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

“சிறு பிள்ளைகளுக்குச் சமய உணர்ச்சி இயற்கையே இருக்கின்றது. சமயஉணர்ச்சியில்லாத பிள்ளைகள் இல்லை. ஆனால் ஆசிரியர்களும் பெற்றோர்களும் அந்தஉணர்ச்சியைத் தக்கமுறையில் அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய அறிவுக்குப் பொருத்தமான முறையில் வளர்ப்பது அவசியம். மாணவர் களுக்கு அறிவு சாஸ்வதமாகவும் வளரக்கூடியதாகவும் இருக்கின்றது என்றும், அதில் சாஸ்வதஞானத்தை நேரில் வளரச்செய்வதும் வளரக்கூடிய அறிவை ஜாக்ரதையாகச் சீரிய முறையுள்ளதாகச் செய்வதுமே பெரியோர்கள் செய்ய வேண்டிய வேலை என்றும், விவேகானந்தஅடிகள் சொல்லு கின்றார். ஆதலால் மதப்பிரசாரத்திற்குச் செய்யவேண்டிய முக்கியமானவேலை புராண வரலாறுகளை அப்படியே நம்பு என்று சொல்வதைக் காட்டிலும் அவற்றின் தத்துவங்களை எடுத்துக்கூறி தத்துவ உணர்ச்சிக்காக அந்த வரலாறுகள் எழுதப்பெற்றன என்று விளக்கவேண்டும். மதப்பிரசார கர்கள் வாய்ப்பேச்சு வீரர்களாகமட்டும் இருத்தல் கூடாது.

அவர்களிடம் ஒழுக்கமும் இருக்கவேண்டும். ஒழுக்க மில்லாதவர்களுடைய பேச்சு எவ்வளவு சிறந்ததாயினும் அதில் ஒளி இருக்காது; உறுதி இருக்காது. உண்மையில் லாத இடத்தில் ஒளியிருக்குமா? என்றும் வெறும்பேச்சு வீண் ஆரவாரம் ஆதலால் உணர்ச்சி, பேச்சு ஒழுக்கம் எல்லாம் நன்ருக இருக்கவேண்டும். நமது கோயில்கள் அமைதிக்காகச் செல்லுமிடங்கள்; அங்கே பரிசுத்தம் நிலவும் படி செய்யவேண்டும் சத்தம்கூடாது. ஓயாத சத்தம் ஒழியாத கவலையை உண்டுபண்ணும். அடங்கவேண்டிய இடத்தில் மனம் அலையநேரிடும். ஆதலால் சில மற்ற மதக்கோயில்கள் போல நமது கோயில்களிலும் ஒரு கட்டுப் பாடு நிலவச்செய்தல்வேண்டும். கண்ணியமான மதப் பற்றுடையவர்கள் அப்பரடிகளைப்போலத்தான் இருப்பார் கள். அப்பரடிகள் பேச்சில் ஆண்மை, உண்மை, வீரம் தொனிக்கிறது! அப்படி ஒவ்வொருவரும் உறுதியும் நம்பிக் கையும் உடையவர்களாய் இருந்து உண்மையாய் உழைக்க வேண்டும். அந்தத் தொண்டினைச் செய்கின்ற - செய்ய இருக்கின்ற இந்தச் சுற்றுப்பிரயாணத்தைத் தொடங்கி வைக்கின்றேன். இத்தகைய பணியைக் காலநிலைக் கேற்பத் தொடங்கிவைக்கும் சந்நிதானத்தின் தீர்க்காலோசனையைப் பாராட்டுகின்றேன்.''

பிறகு ராமகிருஷ்ண மடாலய ஸ்ரீமத் பரமாத்மாநந்தா அவர்கள் தொடர்புரையாக உலகத்தில் இன்பம் என்பன யாவையுமே துன்பம் என்றும், உலக இன்பங்களை விட்டு சாஸ்வதமான இன்பத்தைக் கடவுள் வழிபாடு ஒன்ருலேயே அடையமுடியும் என்றும், அவ்வழிபாட்டுமுறையை மக்க

ளுக்குச் சொல்லவேண்டிய முறையே பிரசாரம் என்றும், பிரசாரத்தில் மக்களுக்கு உணவு உடை உள்ளம் இவற்றின் ஒழுக்கத்தையும், தன்னலமற்ற தியாக உணர்ச்சியையும் உபதேசிக்க வேண்டுமென்றும், அவர்களே தாமும் இன்ப மாயிருந்து பிறரையும் இன்பம் ஆக்குபவர்கள் என்றும், அந்தக்கடவுளை வசப்படுத்தும் முறை "விறகிற் றீயினன்" என்ற பாசுரத்தில் நாயனுர் விளக்குகிருர் என்றும், விரி வாக எடுத்துப் பேசினுர்கள்.

பிறகு அறநிலையப்பாதுகாப்புக் கழகத்தலைவர் திரு. T. M. சின்னையாபிள்ளையவர்கள் தலைமையில் திருமலை ஐயங்கார் அவர்கள் மயிலை, சைவசபை மதங்களுக்கும் கிறிஸ்துவின் மதத்துக்கும் எல்லாமதங்களுக்கும் ஒப்பக் கூறிய வள்ளுவனுர்க்கு உரிய இடமானதால் இங்கேதான் இந்தப்பணி தொடங்கி யிருப்பது மிகவும் பொருத்தம் என்றும், இந்தப்பணியைக் காலமறிந்து தொடங்கிய மகா சந்நிதானத்தின் பெருந்தன்மை எல்லாரும் கொண்டாடக் கூடியது ஒன்று என்றும் பேசினுர்கள்.

மேரி அரசியலார் கல்லூரி விஞ்ஞானப் பேராசிரியை திருமதி, E. T. இராஜேஸ்வரியம்மையார் B.A., L.T,, அவர் கள் உலகம் அம்மையப்பர் சொரூபம் என்றும், பிரசாரம் இன்றியமையாதது என்பது இந்தச் சமயநிலைக்கும் வந்தது ஒவ்வொரு தெய்வ உணர்ச்சியுள்ளவனும் வருந்தக்கூடிய விஷயமென்றும் சாதிப்பிணக்குச் சமயநிலையில் கிடையாது, ஞானசம்பந்தர் நீலகண்டயாழ்ப்பாணரைக் கொண்டதே

சான்று என்றும், பிரசாரகர்கள் உழைப்பு தியாகம் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்றும் பிரசாரம் செய்ய வேண்டுவதில்லை யென்றும் கூறி, முடித்தனர்.

பின்னர் திரு. R. சண்முகசுந்தரஞ் செட்டியார் அவர்களால் செய்திகள் படிக்கப்பட்டன.

சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் நன்றிகூறு முகத்தால் சமயவாழ்க்கை யொன்றே மக்களிடம் பொது அன்பை வளர்ப்பதும் மனிதவர்க்கத்துக்கே பயன்படுபவனாக மனிதனைச்செய்வதும் என்றும், நம்முடைய சமயப் பிரசாரங்கள் மனிதனுடைய உலகியல் வாழ்க்கையோடு ஒன்றுவதாக, அதற்கு வழி வகுப்பதாக இருக்கவேண்டும் என்றும் கூறி இப்பணியை உலகியல் நிலைக்கு ஒப்ப முன்னரேயறிந்து எதனையும் இயற்றி வரும் மகா சந்நிதானத்தின் தீர்க்கதரிசனம் எங்களால் பெரிதும் நன்றி பாராட்டப் படுவனவற்றுள் முந்தியது என்றும் தலைமைதாங்கிய கனம் கல்வியமைச்சர் அவர்களுக்கும் திரு. T. M. சின்னையா பிள்ளை அவர்கட்கும் சொற்பொழிவாற்றியதைக் கேட்ட அனைவருக்கும் நன்றி உரியதாகும் என்றுங் கூறினார்கள்.

பிறகு மங்கல வாழ்த்துபாடப்பெற்று ஸ்ரீ கபாலீஸ்வரர் வழிபாட்டுடன் விழா இனிது நிறைவேறியது.

4—7—48 மாலை 6மணிக்குத் திருவொற்றியூர்த் திருக்கோயிலில், திரு. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் தலைமையில் சமயப்பிரசாரக் கூட்டந் தொடங்கியது.

கூட்டத் தொடக்கத்தில் பிரசங்க பூஷணம், பு. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறினர். திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் கடவுட் கொள்கையால் அச்சம் அகலும், நோய் வறுமை யில்லை, எல்லா இன்பமும் உண்டு, என்பதைக் கற்குடி ஞான சம்பந்தர் வாக்கை யாதாரமாகக் கொண்டு பேசினார்கள். பின்னர் திரு. ச. தண்டபாணி தேசிகர் சமய உணர்ச்சி இளமையிலேயே வேண்டும். ஆகையால் தொடக்கநிலைப் பள்ளிகளிலேயே கடவுட் சம்பந்தமான பாடங்கள் பாடல்கள் பயிற்றுவிக்கப் பெறுதல்வேண்டும். நீதியென்ற தலைப்பால் மதபோதனை கூடாது, மத போதனைக்குச் சிறப்புரிமை வழங்கும் பாடத்திட்டம் வேண்டும். அதற்கு ஆவனவற்றைக் கல்வி ஆலோசகராக இருக்கும் பிள்ளையவர்கள் செய்வார்களாகவென்று வேண்டிக்கொண்டார். பின்னர் இரத்தின சபாபதி நாயக்கர் அவர்கள், ஆன்மா மல நீங்கி ஆனந்தம் பெறச் சமயம்வேண்டும். ஆனந்தம் அன்புமயம். அன்பு சிவமென்று பேசினார்கள். பின்னர் சுவாமிகள் அவர்கள் சமயத்திட்டங்கள் சிலவற்றை, உணர்ச்சி ததும்ப உணர்த்தினர்கள்.

5—7—48 மாலை 7-மணிக்கு டவுன் கந்தசாமி கோயில் திருமுன் திரு. ரா. சண்முகசுந்தரஞ் செட்டியார் தலைமையில், நடைபெற்றது. ஆதீனத்தேவார ஆசிரியர் மாணவர்கள் தேவாரபாராயணம் செய்தனர். தலைவர் அவர்கள், இன்றைய சமயநிலையினையும், அதற்குச் செய்யவேண்டிய பணியினையும், சென்று சென்று,

பணிசெய்யவேண்டிய நிலையினையும் எடுத்துக் கூறினார். திரு. ச. தண்டபாணி தேசிகர் ஆலயவழிபாட்டுமுறை யினமைப்பையும், அதன் குறிக்கோள்களையும், தேங்காய் உடைப்பதும், வாழைப்பழம் நிவேதிப்பது கர்ப்பூர ஆராத்தி முதலியவற்றின் அடிப்படைத் தத்துவங்களை யும் பற்றிப்பேசினார். திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் மதப்பணிகளின் அவசியமும், பணியாற்ற வேண்டிய முறைகளும் இவை என எடுத்தியம்பலானார். Asst. போலீஸ் ஸூபரின்டெண்ட் தேவராஜ முதலியார் அவர்கள் ஆதீனம் சமயத்திற்காகச்செய்து வருந் தொண்டு களைப்பற்றிவிவரித்துப்பாராட்டினார். திரு.க. சோமசுந்தரஞ் செட்டியார் விபூதி, ருத்திராக்க பஞ்சாக்கரப்பெருமை களைப்பற்றி விவரித்தார். தலைவர் முடிவுரை கூறக் கூட்டம் இனிது முடிந்தது. கடவுள் வாழ்த்தும் வழிபாடும் நிகழ்ந்தன.

7—7—48. மாலை 5-மணிக்கு பைகிராப்ஸ்ரோடு, சிவசுப்ரமணிய பக்தஜன சபையின் ஆதரவில், அதன் தலைவர், (ராவ்சாகேப்) லோகநாத முதலியார் அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் கூட்டம் தொடங்கி யது. தலைவரை வரவேற்று ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் பேசினார்கள். பின்னர் திரு. ச. தண்டபாணி தேசிகர் ஆலயவழிபாடு என்பது பற்றி உருவ வழிபாட்டின் இன்றியமையாமையைப் பல மேற் கோள்களுடன் பேசினார். பின் ஸ்ரீ ஜகநாத நாயுடு அவர்கள் தொடர்ந்து பாராட்டிப் பேசினார். காரியதரிசி திரு. சிவசங்கர முதலியாரவர்களும் தலைவர், லோகநாத

முதலியாரவர்களும், ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருவுள்ளம், இந்தப்பணியில் பதிந்த அருமைப் பாட்டை மிகமிகப் பாராட்டிப் பேசினர்கள். மங்கள வாழ்த்துடன் $6\frac{3}{4}$-மணிக்குக் கூட்டம் முடிவுற்றது, பாம்பன்சுவாமிகள் திருவுருவ வழிபாடும், சுப்பிரமணியர் வழிபாடும் நிகழ்ந்தது. சபைப் பெண்மணிகளால் திருப்புகழ்ப் பாராயணம் செய்யப்பட்டது.

7—7—48 மாலை 7-மணிக்குத் தியாகராயநகர் சிவ விஷ்ணுகோயில் பிரசங்க சபாமண்டபத்தில் தேவார பாராயணம் நடைபெற்றது. (Ex) ஷெரீப் ஸ்ரீ ராமசாமி நாயுடு அவர்களும், அமைச்சர் ராவ்சாஹேப் V. சின்னசாமி ஐயரவர்களும் வெள்ளிக்கிழமை இரவு எட்டுமணிக்கு மேல், பிரசார நிகழ்ச்சியை மீண்டுமொருமுறை நிகழ்த்துவிக்கவேண்டும் என்று சொன்னதின்பேரில், திரு. A. முத்தையா M. A. அவர்களால் நன்றியும், கூட்ட நிகழ்ச்சியும் அறிவிக்கப்பெற்று மங்களவாழ்த்துடன் இனிது நிறைவேறியது. பின் திரு. ராமசாமி நாயுடு அவர்கள் பிரசாரவாகனத்தைப் பார்வையிட்டு, வெளியீடுகளைப் பெற்று மகிழ்ந்தனர். திரும்பவும் ஒருமுறை இங்கு வர வேண்டும் என்று வேண்டிக்கொண்டனர்.

8—7—48 மாலை 6மணிக்குச் சிந்தாதிரிப்பேட்டை வாசிகள் வேண்டுகோளின் வண்ணம் ஸ்ரீ ஆதிபுரீசர்கோயில் சந்நிதி பதினறுகால் மண்டபத்தில் கூடிய பெருங் கூட்டத்தில் மாஜி டிப்டிமேயர், லக்ஷ்மணசாமிமுதலியார் அவர்கள் தலைமையில் கூட்டம் தொடங்கியது. சுமார் அரைமணி

நேரம் தேவார இன்னிசை பரப்பப்பெற்றது. பின் தலைவரவர்கள், இந்துசமயம் அடிப்படையான பல உண்மைகளையுடையது என்றும், அதன் சட்டப்படி மக்கள் சரிவர நடவாமையால் பலமாறுதல்களும் மதமாற்றங்களும், நிகழ்ந்தன என்றும், அதனல் இன்று இந்தியாவில் பக்தியையும் இழந்து, இரத்தமும் சிந்தி அவதிப்படுகிறோம் என்றும், இந்த நிலைமாறவே ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பெருமுயற்சி செய்கிறார்களென்றும் பேசினர். பின் திரு. ச. தண்டபாணி தேசிகரால் இனிமையின் இயல்பும், இனிமைசென்று பற்றுமிடங்களும், அதற்கு வரும் இடையூறுகளும், அதனல் நிலைத்த இனிமை இருக்குமிடம் ஒன்றே என்றும், 'கனியிலும்'...'என்னிலும்' என்ற குறுந்தொகைகளைக்கொண்டு பெரும்பொருள் விரித்தார். சுவாமிகளவர்கள் ஆணவத்தின் தன்மை ஆன்மவியாபகத்தைத் தடுப்பது என்றும், அதனல் அது நீங்கக் கருணைக்கடலாகிய ஆண்டவன் காட்டுகின்றார் என்றும் விரிவாகப் பேசினர்கள். தலைவர் முடிவுரைகூறக் கூட்டம் முடிந்தது. மங்கள வாழ்த்துகூற வழிபாடும் நடைபெற்றன.

தக்கர் பாபா வித்தியாலயத்தில் சென்னை கனம் மேயர் Dr. U. கிருஷ்ணராவ் அவர்கள் தலைமையில் திருப்புகழ் மணி, பிர்மஸ்ரீ T. M. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் 'முருக நாமம்' என்பது பற்றிப் பேசினர்கள். உதவி மேயர் லக்ஷ்மணசாமி முதலியாரவர்கள் தலைமையில் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்களும், சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளும் சொற்பொழிவாற்றினர்கள். வித்யாலய மாணவர் தலைவர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

2-வது சுற்றுப்பிரயாணம்:

19—8—48 திருவிடைமருதூர் ஸ்ரீமகாலிங்கசுவாமி ஆலயம்: அவ்வூர் தேவார ஆசிரியர் வித்துவான், திரு. மு. நடராஜதேசிகர் "பிறவிப்பயன்", அவ்வூர் திருவாவடுதுறை ஆதீன உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. பொன். சுப்பிரமணியபிள்ளை "தமிழ்த்தெய்வம்", அவ்வூர் ரிட்டையர்டு போஸ்டுமாஸ்டர் திரு. பக்கிரிசாமிப் பிள்ளை "கடவுளை அடைவது எப்படி?".

20—8—48 கும்பகோணம் ஸ்ரீ கும்பேசுவரசுவாமி ஆலயம்: வித்துவான், திரு. நடராஜ தேசிகர் "நாவலூரர் நற்றமிழ்", வித்துவான், திரு. பொன். சுப்பிரமணியபிள்ளை "தென்தமிழ்ப்பயன்", சிவநேசர் திருக்கூட்டத்தலைவர் திரு. குமாரசாமிச் செட்டியார் "ஆலய வழிபாடு", உபதலைவர் திரு. சொக்கலிங்கச் செட்டியார் "சமயப் பிரசாரத்தின் அவசியமும், ஆலயவழிபாட்டின் நியதிகளும்", காரியதரிசி திரு. S. சுந்தரேசஞ் செட்டியார் B. A., L. T., "சமயத் தொண்டு", திருவிடைமருதூர் திரு. சிதம்பர தேசிகர் "சமயத்தொண்டும், தமிழ்த்தொண்டும்", அவ்வூர் தமிழ் வித்துவான், திரு. கணபதிதேசிகர் "மக்களின்குறிக்கோள்", குடந்தை சைவப்பிரசாரகர் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை "திருவாசகம்".

21—8—48 திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி ஆலயம்: ஜில்லாமுனிசிப் திரு. T. S. இராமலிங்கம் பிள்ளை M. A., B. L., திரு. நடராஜதேசிகர் "ஐயாறப்பர் அருள்", அவ்வூர் அரசர்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான்,

திரு. இராம. கோவிந்தசாமிபிள்ளை "திருவையாற்றுத் திரு விருத்தங்கள்", செம்பொனார்கோயில் வித்துவான், திரு. இரத்தினம் பிள்ளை "அப்பரருள்", ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சைவசமயமே எச்சமயத்துக்கும் தாயகம்".

22—8—48 கரந்தைத் தமிழ்ச்சங்கம்: தலைவர் ஜில்லா போர்டு ஸ்பெஷல் ஆபீஸர், திரு. வேதாசலம் பிள்ளை, ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் "சைவசமயம்", திரு. இராம. கோவிந்தசாமிபிள்ளை "சமயநூல்", திரு. நடராஜ தேசிகர் "தேவர் குறளும், மூவர் தமிழும்".

23—8—48 திருச்சி மலைக்கோட்டை நூற்றுக்கால் மண்டபம்: ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "திருஐந்தெழுத்து", திருக்கடவூர் தேவஸ்தானம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். கந்தசாமித் தம்பிரான் சுவாமிகள் "கடவுள் உண்மை", திரு. நடராஜதேசிகர் "சிவவழிபாடு", திரு. துரைசாமி ஐயர் "ஆலயப்பிரசாரம்", திருச்சி மலைக் கோட்டை மௌனமடம் கட்டளை விசாரணை ஸ்ரீமத். நாக லிங்கத் தம்பிரான் சுவாமிகள் "சைவசமயம்", வித்துவான், திரு. பஞ்சநதம் பிள்ளை "சமயத்தொண்டு".

24—8—48 திருவானைக்காவல் அம்மன்சந்நிதியில்: மாலை 6-மணி திரு. அரசு B. A., "தோத்திரம்", ஸ்ரீமத். நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "நாயன்மார்", திரு. நடராஜ தேசிகர் "ஞானசம்பந்தன் நற்றமிழ்", வித்துவான், திரு. பட்டுசாமி ஓதுவார் "மங்கையர்க்கரசியார்", திரு. பஞ்சநதம் பிள்ளை "சமயவாழ்க்கை", ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "முப்பொருள்".

25—8—48 திண்டுக்கல் ஸ்ரீ அபிராமியம்மன் சந்நிதி: மாலை 6-மணி ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சைவசமயம்", ஸ்ரீமத். நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "நெஞ்சமே கோயில்", திரு. நடராஜதேசிகர் "அப்பர் காட்டிய நெறி", திரு. அரசு B. A., "தோத்திரம்", அரச வழக்கறிஞர் திரு. சண்முகநாதன் B. A., B. L., "கடவுள் நெறி", நகர ஆணையாளர் திரு. கி. இராமலிங்க முதலியார் M. A., "தருமையாதீன சமயத்தொண்டு", பெருவழக் கறிஞர் திரு. கி. குப்புசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

26—8—48 பழநி மேல்பிரசங்கசபா மண்டபத்தில்: ஸ்ரீமத். நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "விக்ரஹ ஆராதனை", திரு. அரசு B. A., "தோத்திரம்", திரு. நடராஜ தேசிகர் "பாலனும் வேலனும்", சைவசித்தாந்த சரபம் சிவத்திரு. ஈசானசிவாசாரியார் "சாத்திரக்கருத்தும், சமயத் தொண்டும்", குகஸ்ரீ. கிருபானந்தவாரியார் "சமயத் தொண்டின் அவசியமும், பாராட்டும்".

27—8—48 பழநி பெரியநாயகி அம்மன் சந்நிதி: சிவத்திரு. ஈசானசிவாசாரியார் "சமயத்தொண்டு", திரு. அரசு B. A., "திருமுருகாற்றுப்படை", ஸ்ரீமத். நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "சமயப்பிரசாரம்", ஸ்ரீமத். சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சைவச்சிறப்பு", திண்டுக்கல் டிப்டிகலெக்டர் திரு. சோமசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் இக்கூட்டம் காலை 9-மணிமுதல் 12-மணிவரை நடைபெற்றது.

27—8—48 திண்டுக்கல் ரேணுகாதேவி அம்மன் சந்நிதி: முனிசிபல் கமிஷனர் திரு. கி. இராமலிங்க முதலியார் M. A., அவர்கள் தலைமையில் மாலை சிவத்திரு. ஈசான சிவாசாரியார் "சைவசமயம்".

28—8—48 திண்டுக்கல் அபிராமி அம்மன் சந்நிதி: தலைவர் திரு. கி. இராமலிங்க முதலியார் M. A. ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் "சைவசமயம்", ஸ்ரீமத். நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "சமயமும் சமூகமும்", வித்துவான், திரு. க. கு. முத்தையா "விக்ரஹ ஆராதனை", வித்துவான், திரு. க. முருகேசன் "மணிவாசகர்", வித்துவான், திரு. பாலகிருஷ்ணன் "சைவசமயம்", வித்துவான், திரு. குருசாமி ' சைவசமயம்".

29—8—48 பழநி அடிவாரம் பாலையசாமி மடம்: சிவத்திரு. ஈசானசிவாசாரியார் "சைவசமயம்".

1—9—48 திருவாரூர் கோயில் ஆயிரக்கால் மண்டபம்: தலைவர் நகரமன்ற ஆணையாளர் திரு. நாராயணசாமி முதலியார் B. A. ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "நமது கடமை", தமிழ்மணி திரு. சாமி. வேலாயுதம்பிள்ளை B. A., L. T., "மணிவாசகர்", திரு. நடராஜதேசிகர் "நம்பி ஆரூரர் நற்றமிழ்", வித்துவான், திரு. M. சண்முகதேசிகர் "அதிபத்தர், புகழ்த்துணைநாயனார்", ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சைவசமயம்", திரு. பாண்டியம் பிள்ளை M. A., திரு. ச. க. தியாகராஜ பிள்ளை, வித்துவான், திரு. M. இரத்தின தேசிகர், வித்துவான், திரு. A. இராஜகோபால சர்மா, திரு. சிவஞானமௌனகுரு உருத்திர

மூர்த்தி தேசிகர் ஆகியோர்களும் சைவசமயச் சிறப்பை எடுத்து மொழிந்தார்கள்.

2—9—48 நன்னிலம் போர்டு ஹைஸ்கூல்: ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "கடவுள் உண்மை", திரு. நடராஜதேசிகர் "தேவர்குறளும் மூவர்தமிழும்", திரு. M. இரத்தின தேசிகர் "சமயத்தொண்டு".

2—9—48 பேரளம் கோயில் அம்மன் சந்நிதி: திரு. M. இரத்தின தேசிகர், திரு. M. நடராஜ தேசிகர், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ஆகியோர்கள் "சைவ சமயம்" என்பதுபற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

3-வது சுற்றுப்பிரயாணம்:

திருமங்கலக்குடி: 26—9—48 மாலை 5½-மணிக்கு கோயில் சந்நிதியில்: சூரியனார்கோயில் ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானமவர்களின் தலைமையில் வேளூர் கட்டளை விசாரணை ஸ்ரீமத். சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் "முப்பொருளுண்மை", ஆதீன ஓதுவார் திரு. நடேச பிள்ளை "சிவநெறிப்பிரகாசம்", வித்துவான் திரு. மு. நடராஜ தேசிகர் "மங்கலக்குடித் திருப்பதிகம்", திரு. மீ. சுந்தரம் பிள்ளை "சமயாசாரியர்".

திருப்பனந்தாள்: 26—9—48 இரவு 9-மணிக்கு; கோயில் பதினாறுகால் மண்டபத்தில்; திரு. மீ. சுந்தரம் பிள்ளை "திருக்கோவையார்", வித்துவான் திரு. கே. எம். வேங்கடராமையா M. A. B. O. L. "கூற்றுதைத்ததிருவடி

யும் ஐந்தெழுத்தும்'', திரு. மு. நடராஜதேசிகர் ''பஞ்சாக்கரப் பதிகம்'', ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ''ஐந்தெழுத்தும் முப்பொருளும்''.

திருக்கூடலையாற்றூர்: 27—9—48காலை 11மணிக்குக் கோயில்சந்நிதியில்; திரு.நடராஜதேசிகர் ''திருமுறை'', திரு. மீ. சுந்தரம் பிள்ளை ''மெய்ப்பொருள் நாயனார்'', ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் ''சைவ சாதனங்கள்''.

திருப்பெண்ணாகடம்: 27—9—48 மாலை 6-மணிக்குக் கோயில் சந்நிதி; திரு. நடராஜதேசிகர் ''வேண்டுவார் வேண்டுவதே ஈவான்கண்டாய்''. திரு. மீ. சுந்தரம் பிள்ளை ''திருநாவுக்கரசு'', சப்ரிஜிஸ்டார் திரு. சுந்தரேசம் பிள்ளை M. A. ''சமயப்பிரசாரம்'', ஆசிரியர், திரு. சிங்காரவேலு குருக்கள் ''சமயத்தொண்டு'' வக்கீல், திரு. ரங்கசாமிப் பிள்ளை ''மெய்கண்டார் அவதார ஸ்தலச்சிறப்பு'', ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றன.

திருநெல்வாயிலரத்துறை: 28—9—48 அன்று காலை கோயிலில் பிரசாரகோஷ்டியினர் ''கலிக்கம்பநாயனார் புராணம்''.

விருத்தாசலம்: 28—9—48 அன்று மாலை 6-மணிக்கு கோயில் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் திரு. மீ. சுந்தரம் பிள்ளை ''வன்றொண்டர்'', திரு. மு. நடராஜ தேசிகர் ''மணிவாசகர்'', வக்கீல் திரு, A. ரத்தினசபாபதிப்பிள்ளை B.A,B.L. ''சிவத்தொண்டு''

திரு. முருகேச உடையார் "இறைவனும் மக்களும்", திரு. T. N, கிருஷ்ணமூர்த்தி ஐயர் B.A.L.T. "நல்லிணக்கம்", வித்துவான், திரு, சாமிநாத பிள்ளை "தொண்டர்சீர் பரவுவார்", திரு, சிங்காரவேலு குருக்கள் "சமயத் தொண்டு",

திருவதிகை; 29—9—48 மாலை 4-மணிக்கு ஸ்ரீ மெய் கண்டார் மடத்தில் திரு. மீ, சுந்தரம் பிள்ளை "சுந்தரர்" திரு. மு. நடராஜ தேசிகர் "காவலரும் நாவலரும்", சப் ரிஜிஸ்ட்ரார், திரு, விசுவநாதன் B. A, "திருக்குறள் கடவுள் வணக்கம்", திரு, சிவப்பிரகாச முதலியார் "ஏழாந் திருமுறை", ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சைவச்சிறப்பு",

திருநாவலூர்:. 29—9—48 இரவு 8-மணி கோயில் சந்நிதியில் திரு. மு நடராஜதேசிகர் 'சுந்தரர் செந்தமிழ்' திரு. மீ. சுந்தரம் பிள்ளை "சம்பந்தர்" திரு. சிவப்பிரகாச முதலியார் "திருநாவுக்கரசரும் மணிவாசகரும்" ஸ்ரீமத். மௌன சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "கடவுள் வழிபாட்டுமுறை".

பண்ணுருட்டி:- 30—9—48 மாலை 6-மணிக்கு உயர்தரப் பள்ளியில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "சமரசசன்மார்க்கம்', திரு நடராஜ தேசிகர் "திருக்குறளும் நான்மறையும்" திரு. மீ. சுந்தரம் பிள்ளை "திருநாவுக்கரசர்". திரு. பக்கிரிசாமிநயினர் "தமிழும் சைவமும்", திரு. சிவப்பிரகாசம் "திருமுறையில் அரிய கருத்துக்கள்" தலைமையாசிரியர், திரு. கோவிந்தசாமிப் பிள்ளை B. A., L. T,. நன்றியுரை கூறினர்.

திருத்துறையூர்:- 1—10—48 காலை 9-மணிக்கு ஸ்ரீமத் அருணந்திசிவாசாரிய சுவாமிகள் குருபூஜைநன்னாள்; கோயிலில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் "சித்தாந்த சாத்திரமும் சித்தியாரும்" திரு. த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை 'சைவசித்தாந்தமும் குருபூஜைவிழாச் சிறப்பும்", திரு. மு. நடராஜதேசிகர் "தலப்பதிகங்கள்" திரு மீ. சுந்தரம் பிள்ளை "பெரியபுராணம்", திரு. சிவப்பிரகாசம் "நால்வர் அருட்பா".

திருப்பாதிரிப்புலியூர்:- 1—10—48 மாலை 6-மணி முதல் கோயிலில் ஸ்ரீ சிவசண்முகசத்தியஞான சிவாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில்; டிரஸ்டி, திரு. ரத்தின சபாபதிப்பிள்ளை B. A., B L. 'திருமுறைகள்' திரு. மீ. சுந்தரம் பிள்ளை 'சைவசமயம்', கடலூர் முன்சீப், திரு. சுந்தரனார் 'சைவசமயக்கருத்துக்கள்', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சைவசித்தாந்த விளக்கம்', திரு. குருசாமி B. O. L. 'சமயத்திருத்தம்', திரு. நடராஜ தேசிகர் 'அப்பர் அருள்'

சிதம்பரம்:- 2—10—48 மாலை 6-மணிக்குக் கீழக் கோபுரவாயில் சந்நிதி; ஓய்வுபெற்ற ஜில்லாரிஜிஸ்தார் திரு, செல்லசிவம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. நடராஜதேசிகர் 'திருவாதவூரர்', திரு. ராமலிங்க ஓதுவார் 'தலப்பதிகம்' திரு. முருகையா பட்டாரகர் "நடராஜதெரிசனம்", திருவாசகம் திரு. K. M. பாலசுப்பிரமண்யம் B. A. B. L. 'திருவாசகம்' திரு. சுந்தரம்பிள்ளை 'திருக்கோவையார்'

சிதம்பரம்:- 3—10—48 மாலை 3-மணி நந்தனார் குருகுலத்தில் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் கிள்ளை திரு. வீரசுந்தரம் பிள்ளை 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', திரு. தண்டபாணிப் பிள்ளை 'பெரிய புராணச்சிறப்பு'.

சிதம்பரம் 3—10—48 இரவு 10-மணி முதல் கோயில் ஆயிரக்கால்மண்டபத்தில் திரு. K. M. பாலசுப்ரமணியம் B. A. B. L. 'திருவாசகமும் பெரியபுராணமும்', திரு. நடராஜ தேசிகர், திரு. இராமலிங்க ஓதுவார், 'திருமுறைப் புராணச்சிறப்பு' தில்லைத்திருமுறைக்கழகத்தின் சார்பாக திரு. கணபதிப்பிள்ளையால் ஒரு வாழ்த்துரையும் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

புவனகிரி:- 4—10—48 மாலை 6-மணிக்குக் கோயில் ஸ்ரீ மீனாட்சியம்மை சந்நிதியில்; சிதம்பரம் மௌனமடம் சுவாமிகள் தலைமையில் திரு. இரத்தினவேற்பிள்ளை 'நமதுகடமை' திரு, நடராஜ தேசிகர் 'அப்பர் அருள்' திரு. திருநாவுக்கரசுபிள்ளை 'ஆலயவழிபாடு', திரு. தண்டபாணிப் பிள்ளை 'மானுடப்பிறவி', திரு. மீ. சுந்தரம் பிள்ளை 'உமாபதிசிவம்'.

திருநாரையூர் 5—10—48 காலை 10-மணி முதல் பொல்லாப்பிள்ளையார் சந்நிதியில்; திரு. நடராஜ தேசிகர் 'தலப்பதிகம்', திரு. திருநாவுக்கரசுபிள்ளை 'நமதுகடமை', திரு. தண்டபாணிப் பிள்ளை 'சைவநெறி', திரு. மீ. சுந்தரம் பிள்ளை 'திருத்தொண்டரந்தாதி', திருவாசகம் திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. தலைமைவகித்தனர்.

காட்டுமன்னார்குடி:- 5—10—48 மாலை 6-மணி முதல் ஞானவிநாயகர் சந்நிதியில் திரு சோமசுந்தரம் பிள்ளை B. A. L. T, தலைமையில் திரு. நடராஜ தேசிகர் 'சைவம்' திரு. திருநாவுக்கரசுபிள்ளை 'சிவகதி' திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. 'திருவாசகம்' திரு. தண்டபாணிப் பிள்ளை 'சமயத்தொண்டு' திரு. மீ. சுந்தரம்பிள்ளை 'கடவுள்'.

4-வது சுற்றுப்பிரயாணம்:

21—11—48 செம்பொனார் கோவில் ஆலய சந்நிதி; மாலை 3-மணி; நடராசதேசிகர் 'தலப்பதிகம்', சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'விக்கிரக ஆராதனை'.

22—11—48 மாலை 4-மணி திருக்கடவூர் ஆலயம்; வேங்கடாசலம் பிள்ளை 'கடவுள் வழிபாடு', சாமிஐயா தேசிகர் 'சோமவார மகிமை', காசிநாத தேசிகர் 'அன்பு', நடராஜ தேசிகர் 'அருட்கூத்து', திருவாசகம் K. M. பால சுப்பிரமணியம் 'பாசமெனும்தாழ்', ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் 'ஆலயவழிபாடு'.

23—11—48 மாலை 4-மணி பொறையார் நாடார் உயர்தரப்பள்ளி; K. M. பாலசுப்ரமணியம் B. A., B. L., 'கடவுள் உண்மை', நடராஜதேசிகர் 'தோத்திரங்கள்', கோபால்சாமி உடையார் 'வழிபாட்டின் அவசியம்', சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'மாணவர் சங்கமும் சமய போதனையும்'.

23—11—48 தரங்கம்பாடிக் கோயிலில்; நடராஜ தேசிகர் 'திருநடனம்', சோமசுந்தரத் தம்பிரான் 'சைவ சித்தாந்தம்' கோபால்சாமி உடையார் 'சைவசமயம்', பால சுப்பிரமணியபிள்ளை 'சமயப்பிரசாரம்'.

24—11—48 மாலை 4-மணி திருவேட்டகுடி ஆலயத்தில்; நடராஜ தேசிகர் 'தலப்பதிகம்' K. M. பாலசுப்ரமணியம் B.A., B.L., திருவாசகத்தில் அரியகருத்துக்கள்', சோமசுந்தரத் தம்பிரான் 'அடிஞானச் சிறப்பு'.

24—11—48 மாலை 7-மணி காரைக்கால்; அம்மையார் கோவிலில்; நடராஜ தேசிகர் 'அம்மையார் திருஅந்தாதி', K. M. பாலசுப்ரமணியம் 'அம்மையார் வரலாற்றுக் கீர்த்தனை', சோமசுந்தரத் தம்பிரான் 'அம்மையார் தெய்விக வாழ்க்கை'.

25—11—48 மாலை 4-மணி திருமலைராயன்பட்டிணம் செங்குந்த விநாயகர் ஆலயத்தில்; சோமசுந்தரத் தம்பிரான் 'சித்தாந்தம்', நடராஜ தேசிகர் 'அப்பர் அருள்'.

26—11—48 மாலை 3-மணி நாகூர் உயர்தரப்பள்ளியில்; சோமசுந்தரத் தம்பிரான் 'கடவுள் வழிபாடு', நடராஜ தேசிகர் 'ஆலயவழிபாட்டு விளக்கம்'.

26—11—48 இரவு 9-மணி நாகூர் ஆலயத்தில்; சோமசுந்தரத் தம்பிரான் 'சமயம்', நடராஜ தேசிகர் 'வழிபாடு', K. M. பாலசுப்ரமணியம் 'திருவாசக உண்மை', சண்முக தேசிகர் 'யாக்கையால் பயன் என்?'.

27—11—48 மாலை 4-மணி வெளிப்பாளையம் அகஸ்தீஸ்வரர் கோயிலில்; நடராஜ தேசிகர் 'திருமுறை', K. M. பாலசுப்பிரமணியம் 'திருவாசகம்', சோமசுந்தரத் தம்பிரான் 'ஆன்ம இலக்கணம்' சண்முகதேசிகர் 'திருவடிப்பேறு'

28—11—48 மாலை 3-மணி; நாகை உயர்நிலைப்பள்ளி; முனிசிபல் சேர்மன் A. M..P. திருவம்பலம் செட்டியார் தலைமையில்; நடராச தேசிகர் 'தேவர்குறளும் மூவர் தமிழும்', சோமசுந்தரத் தம்பிரான் 'சமயவொழுக்கம்', திருஞானசம்பந்த தேசிகர் 'சைவமுந் தமிழும்' K. M. பாலசுப்ரமணியம் 'அதிபத்தர்', சண்முக தேசிகர் 'சேக்கிழார் கவிநயம்'.

28—11—48 மாலை 7-மணி திருநள்ளாறு ஆலயம்; கலெக்டர் சிவசுப்ரமணியம் தலைமையில்; சண்முக தேசிகர் 'அப்பூதி அடிகள்,' K. M. பாலசுப்ரமணியம் 'ஞானசம்பந்தர்'.

29—11—48 மாலை 6-மணிக்கு நாகை ஆலயத்தில், திருஞானசம்பந்த தேசிகர் 'சைவமங்கையர்', சண்முக தேசிகர் 'பஞ்சமந்திரம்' S. P. சண்முகசுந்தரம் பிள்ளை B.A., L.T., 'கீதையும் குறளும்', K. M. பாலசுப்ரமணியம் 'திருவாசகம்', சோமசுந்தரத் தம்பிரான் 'திருமுறை'.

30—11—48 மாலை 4-மணி நாகை ஹைஸ்கூல் மாணவர் கழகத்தில் A. M. சாமிநாதச் செட்டியார் தலைமையில்; சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'திருக்குறள் கடவுள் வணக்கம்.'

30—11—48 மாலை 7-மணி மஞ்சட்கொல்லை ஆலயத்தில்; K. M. பாலசுப்ரமணியம் 'அழுதேபெறலாம்', ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் 'சைவசமயம்'.

1—12—48 மாலை 6-மணி சிக்கல் ஆலயத்தில்; S. P. சண்முகசுந்தரம் பிள்ளை 'கீதையும் குறளும்', சண்முக தேசிகர் 'அப்பர் தேவாரம்', K. M. பாலசுப்ரமணியம் 'அப்பரும் அப்பூதியும்'.

2—12—48 மாலை 7-மணி கீழ்வேளூர் பெரிய கோவிலில்; சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், 'முப்பொருளுண்மை', சண்முக தேசிகர் 'சேக்கிழாரும் பெரிய புராணமும்', K. M. பாலசுப்ரமணியம் 'விஞ்ஞானமும் கடவுளும்'.

3—12—48 திரு ஆரூர் கோயில் ஆயிரக்கால் மண்டபம்; நாகலிங்கத் தம்பிரான் சுவாமிகள் 'சிறப்புலிநாயனர்', நடராச தேசிகர் 'பஞ்சாக்ஷரம்'.

4—12—48 மாலை 4-மணிக்குத் திரு ஆரூர் மடப்புறம் தக்ஷிணமூர்த்தி கோயிலில் K. சண்முகம் பிள்ளை B.A., B.L., தலைமையில்; நடராச தேசிகர் 'உய்யும்வழி', சுந்தரமூர்த்தி பிள்ளை 'இறைவழிபாடு', சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'சைவசமயம்'.

4—12—48 மாலை 6-மணி விஜயபுரம் ரேணுகாதேவி ஆலயம்; நடராச தேசிகர் 'திருமுறைப்பாராயணம்', சோமசுந்தரத் தம்பிரான் 'ஆஸ்திகம்', K. M. பாலசுப்ரமணியம் 'விஞ்ஞானமும் கடவுளும்'.

மதுரையில் :

10—12—48 மாலை 7-மணி முதல் ஓய்வுபெற்ற விவசாய இலாகா அதிகாரி ஸ்ரீ தருமலிங்க முதலியார் B.A. அவர்கள் தலைமையில் ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் 'கடவுள் வாழ்த்தும் தற்போத வாழ்வும்'; மதுரைத்தமிழ்ச்சங்க ஆசிரியர் திரு. K. சிவஞானம்பிள்ளை 'திருவெம்பாவை'

11—12—48 மாலை 6மணிமுதல் மத்திய பங்கீடு அதிகாரி திரு. நா. லெக்ஷ்மணப்பெருமாள் நாயுடு B, A, அவர்கள் தலைமையில் தருமையா தீனக்கல்லூரிப் பேராசிரியர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார் 'மதுரையும் குமர குருபரரும்'; சாத்தூர் திரு. கந்தசாமி முதலியார் B. A· 'வள்ளுவரும் திருத்தொண்டர் உளநூலும்'.

12—12—48 மாலை 6-மணிமுதல் (Additional District Magistrate,) திரு. A. சோமசுந்தர முதலியார் B. A. அவர்கள் தலைமையில் திருவையாறு திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B.L., 'திருவாசகம்'.

13—12—48 மாலை 6-மணிமுதல் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான்சுவாமிகள் தலைமையில், சிவஸ்ரீ ஈசானசிவா சாரியார் 'சுந்தரர்' பாலகவி இராமநாதன் செட்டியார் 'சுந்தரர்'; திரு. வே.பக்தவத்ஸலமுதலியார் 'அருள்வாக்கு'.

14—12—48 மாலை 6-மணிமுதல் அவ்வூர் பிரபல வக்கீல் ஸ்ரீ T. C, ஸ்ரீநிவாச ஐயங்கார் B. A., B, L. அவர்கள் தலைமையில் திரு. K. M. பாலசுப்பிரமணியம் B.A., B.L., அவர்கள் 'திருவாசகம்'

நன்றியுரை

இவ்வண்ணம் இந்தப்பிரசாரவாகனத்தைத் தொடங்கி வைத்தும் அதன் மூலம் சமயப்பிரசாரம் செவ்வனே நடைபெற அவ்வப்போது எல்லா வகையாலும், உதவி புரிந்தும் ஊக்கிவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குத்** தமிழுலகம் நன்றி செலுத்தும் கடமைப்பாடுடையது.

இந்த வாகனப்பிரசாரத்தை முதல் முதல் தொடங்கி வைத்த பழைய கல்வி மந்திரி கனம் **அவினாசிலிங்கம் செட்டியாரவர்களுக்குப்**, இந்தப் பிரசாரம் ஒழுங்காய் நடைபெற ஆணைபிறப்பித்துத் தொடக்கவிழாவில் தலைமை யுந்தாங்கிய அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தலைவர் திரு. **T. M. சின்னையாப்பிள்ளை** அவர்களுக்கும், இப்பணியில் மிகவும் சிரத்தைகாட்டிய சென்னைப் பிரதமர் திரு. **ஓ. பி ராமசாமி செட்டியாரவர்களுக்கும்**, இதிற் பங்கு கொண்ட திரு. **டி. எம். கிருஷ்ணசாமி ஐயரவர்கள்**, சென்னை மேயர், டாக்டர் திரு **கிருஷ்ணராவ் அவர்கள், திரு. ராமசாமி நாயுடு அவர்கள், திரு. இலக்ஷ்மணசாமி முதலியாரவர்கள், திரு. டி. பி. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள், ராஜா சர். முத்தையா செட்டியாரவர்கள்**, சட்டசபைத் தலைவர் **ஜே. சிவசண்முகம் பிள்ளை யவர்கள், டாக்டர் திருமூர்த்தி அவர்கள்** முதலிய பல பிரமுகர்களுக்கும், பிரசாரவாகனம் சென்ற இடங்களிலெல்லாம் தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும் வரவேற்றும் சிறப்பித்த பிரமுகர்களனைவருக்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

இந்த முதலாண்டு விழாவுக்குத் தலைமைதாங்கிச் சிறப்பிக்கும் கனம் கல்வி மந்திரி **கே. மாதவமேனன் அவர்களுக்கும்**, இதிற் பங்குகொண்டு சிறப்பிக்கும் **சர்தார் ஸ்ரீ வேதரத்தினம் அவர்களுக்கும், ஸ்ரீமதி குட்டிஅம்மாளு அம்மாள் அவர்களுக்கும்**, திருவாசகமணி **கே. எம். பால சுப்பிரமணியம் அவர்களுக்கும்**, இதனைச்சிறப்பிக்கும் ஏனைய அன்பர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகுக.

பிரசாரத்தின் மூலமாகவே சுதந்திரங்கண்ட நமது **காங்கிரஸ் அரசாங்கம்,** பிரசாரத்தின் மூலமாகவே சமய சுதந்திரத்தையும் தேடவேண்டும் என்று எண்ணி வழக்கம் போல இந்தப் பிரசார இயக்கத்திற்கு வேண்டிய உதவிகளைக் காலதாமதமின்னியில் உடனுக்குடனே கருத்தூன்றிக் கவனித்துச் செய்துவருவதால் **அவ்வரசாங்கத்திற்கு** எங்கள் நன்றி என்றும் உரியது.

"ஞாலம் நின்புகழே மிகுதல் வேண்டும்" என்பதனைத் திருவுள்ளத்துக்கொண்டு பிரசாரவாகனம் தமிழ்நாடு எங்கும் சென்று பணியாற்ற மேலும் மேலும் ஊக்கிவரும் எங்கள் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் திருவடிக்கமலங்களைப் போற்றுகின்றோம்.

தருமபுரம்,
3—10—49.

இங்ஙனம்,
சோமசுந்தரத்தம்பிரான்,
பிரசாரக்குழுவினர் தலைவர்.

செய்தித்தாள்கள் சொல்கின்றன...

சர்க்காரையும்விட வேகமாகப் போகப்போகிறார்கள் தருமபுர மடாலயத்தார். மதசம்பந்தமான போதனைகளைச் சிலருக்குத்தந்து அவர்களை மதப் பிரசாரகர்களாக வெளியே அனுப்புவதென்று சர்க்கார் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால், தருமபுர மடத்திலிருந்து, ஏற்கனவே இம்மாதிரியான பிரசாரகர்கள் சிலர், நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று பிரசாரம் செய்து வருகிறார்கள். இப்பொழுது சைவ மதப் பிரசாரத்திற்கென்று ஒருமோட்டார் வண்டியைத் தயாரித்திருக்கிறார்கள். அதிலே ஒரு கல்வியறிவு மிக்க தம்பிரான், பிரசாரகர், தேவார கோஷ்டியார் எல்லாம் இருக்க இடம் செய்யப்பட்டிருக்கிறதாம். ஒலிபெருக்கி, சிறுலைப்ரரி எல்லாம் அதிலே இருக்குமாம். இதற்கு வருகிற சனியன்று சுக்லாம்பரதரம் குட்டிக் கொள்ளப் போகிறார்களாம் மயிலை கபாலி சந்நிதியில். கனம் மந்திரி, அவினாசிலிங்கம் செட்டியாரும், அறநிலையப்பாதுகாப்புக் கழகத் தலைவரும் வந்திருந்து, ஆசிகூறி, இந்தத் தருமபுர ஆதீன மடாலய தேவாலய பிரசார வாகனத்தை வழி அனுப்பப்போகிறார்களாம்.

—நாரதர் 30—6—48.

கல்வி மந்திரி ஸ்ரீ டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் நேற்று மாலை மைலாப்பூர் ஸ்ரீ கபாலீஸ்வரர் கோயிலுக்கு எதிரில் மதப் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்தார். தர்மபுரம் ஆதீனத்தைச் சேர்ந்த கட்டளை விசாரணை கர்த்தர் ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான்தான் மோடார் வானில் இப் பிரசாரத்தை நடத்துகிறார்.

இம்மாதிரியான பிரசாரம் இதுதான் முதலாவதாகையால் ஸ்த்ரீகள் உள்பட ஏராளமானவர் பிரசன்னமாயிருந்தனர்.

தர்மபுரமடத்தைச் சேர்ந்த தேவார வித்வான்கள் திருப்புகழ் பாடல்களைப் பாடினர்.

சென்னை கார்ப்பரேஷன் மாஜிகல்வி அதிகாரி ஸ்ரீ எஸ். சச்சிதானந்தம் பிள்ளை கட்டளை விசாரணை கர்த்தாவையும் கல்வி மந்திரியையும் வரவேற்றார்.

ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் மோட்டார் வண்டியில் மதப் பிரசாரம் நடத்தும் நோக்கத்தை விவரிக்கையில் கடவுள் உண்டா என்பதையே இந் நாட்களில் மக்கள் மறந்துவிடுகின்றனர் என்றும், மத முக்கியத்வத்தைப் புரிந்துகொள்ளாமலிருப்பதுதான் இதற்குக் காரணம் என்றும் ஓர் மத கல்லூரி ஏற்படுத்திப் போதனையளிப்பது மிக அவசியமென்றும் கூறினர்.

ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் பேசுகையில் கோயில்கள் நல்ல பணியாற்றி வருவதாகவும் இவ்விதமிருந்தும் கோயில்கள் உபயோகத்தை மக்கள் சரியாகப் புரிந்துக்கொள்ளவில்லை என்றும் வண்டியில் சென்று மதப் பிரசாரம் செய்வது இந்த அறியாமையைப் போக்குவதற்குத்தான் என்றும் கூறினார்.

—தினமணி 5—7—48.

ரொம்ப அழகாகவும் உபயோகமுள்ளதாகவும், பார்ப்பவர்கள் பலே என்று சொல்லும்படியாகவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது தருமபுர ஆதீன சமயப் பிரசாரத்திற்கு உதவப்போகும் மோட்டார் வாகனம். இந்த வாகனத்தோடு, செவிக்கினிமையாகப் பாடும் தேவார சங்கீத கோஷ்டி ஒன்று சென்ற வாரம் வந்திருந்தது. அறிவிற்கு உணவு தரும் வகையில் பேசக் கூடிய தம்பிரான் ஒருவரும் வந்திருந்தார். இவர்களது கானத்தையும் பேச்சையும் கேட்டபின், கனம் மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் செட்டியார் வெகுநேரம் பேசினார். மேற்படி பிரசார வாகனத்தில் 'பாட்டரி' மூலம் இயங்கும் ஒலி பெருக்கி மந்திரியின் பேச்சை எல்லோரது செவிகளிலும் விழச்செய்தது. காலத்திற் கேற்றபடி சமயப் பிரசாரத்தைச் செய்ய வேண்டும் என்பதை அழுத்திச் சொன்னார் அவர்.

அவர் வெகு நேரம் பேசிய பேச்சிலிருந்து, அவர் இம்மாதிரி சமயப் பிரசாரத்தை ஆதரிக்

கிருரா, இல்லையா என்பதே நிச்சயமாக விளங்க வில்லையே என்ருர்கள் அவர் பேச்சைக் கேட்ட சிலர். காலத்திற்கேற்றபடியே மதப்பிரசாரத்தைச் செய்யவேண்டும் எனும் நோக்கத்துடன் தான் தருமபுர ஆதீனத்தார் இம்மாதிரி ஒலி பெருக்கி புத்தகசாலை மோட்டார் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அதற்கு அவர் ஆசி கூறவே இல்லை. தருமபுர ஆதீனத்தாரைக் குறித்தும் சரியாக நாலுவார்த்தைகள் கூடச் சொல்லவில்லை. அது என்னமோபோலிருந்தது.

ஆனல் அன்று வந்திருந்தவர்களில் பலர், 'இது நல்ல ஏற்பாடு என்று கூறினர்' பிரசார வாகனத்தை இரு முறை சுற்றிப்பார்த்துவிட்டு.

—நாரதர் 7—7—48.

மக்கள் சமய அறிவு பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் தருமபுர ஆதீனம் மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால், ஊர்ஊராகச் சென்று சமயப்பிரசாரஞ்செய்ய நிறுவப்பட்டுள்ளமோட்டார் வாகனம் தருமபுர ஆதீன ஸ்தாபகர்களான ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை நன்னளாகிய 28—5—48 அன்று வெள்ளோட்டம் விடப்பட்டது. தரும புரத்தை விட்டுக் கிளம்புஞ்சமயத்தில் ஷை ஆதீனத் தின் மகாசந்நிதானமவர்களும், திருப்பனந்தாள்

மடத்தின் ஆதீனகர்த்தரும் பிரார்த்தனைசெய்து ஆசீர்வதித்தனுப்பினர். வைத்தீஸ்வரன்கோயில் கட்டளைத்தம்பிரானாகிய சோமசுந்தரத் தம்பிரான் தலைமைவகித்து வானைச் செலுத்தச்செய்தார்கள். நாகர்கோயில், ஸ்ரீ கே. ஆறுமுகம் பிள்ளை, மற்றும் பலர் பிரசாரத்தில் பங்கெடுத்துக்கொண்டனர். திருஞானசம்பந்தர் ஞானசம்பந்தம்பெற்ற சீர்காழியில் பிரசாரம் துவக்கப்பட்டு, கார் வைத்தீஸ்வரன் கோயில், மாயவரம் துலாக்கட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஆகியஇடங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டது. திருமுறை இடையிடையே ஓதப் பட்டது. நல்லொழுக்கம்பற்றிய சிறு வெளியீடு இலவசமாக வழங்கப்பட்டது. இந்த வான், தமிழ்நாடெங்கும் பிரசாரம்செய்ய விரைவில் கிளம்பவிருக்கிறது.

பாரததேவி, 2—6—48.

தருமபுர ஆதீனம் சமயப்பிரசார திட்டப்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமயப்பிரசார மோட்டார் வாகனத்தின் வெள்ளோட்டவிழா வெள்ளிக் கிழமை யன்று தருமபுர ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள் குருபூசையன்று விமரிசையாக நடந்தது. திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அருள்நந்தி தம்பிரான் அவர்களும் விஜயம்செய்திருந்தனர். சமயப் பிரசாரத்திற்கு ஆதீன கர்த்தர் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள் தன் ஆசி

களைக் கூறிச் சமயப்பிரசாரத்தின் பயனைப் பொது மக்கள் அனுபவிக்குமாறு தெரிவித்தார்கள். இந்தப் பிரசார வாகனம் நாகர்கோவில், ஸ்ரீ கே. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் பொறுப்பில் ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரானல் தலைமைவகித்து சீகாழி, வைத்தீஸ்வரன்கோயில் மாயவரம் முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கே பொதுக்கூட்டங்களில் சமயப் பிரசாரம்நடந்தேறியது. ஏராளமான ஆஸ்திகர்கள் இதை ஆதரித்துவருகின்றனர்.

தினமணி, 4—6—48.

அதி மும்மரமாகத் தங்கள் மதப்பிரசாரத்தைத் தொடங்கி விட்டார்கள் தருமபுர மடாலயத்தார். கனம் மந்திரி அவிஞசிலிங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பெற்றது இந்தப் பிரசாரத் திட்டம். இதற்கென்றுள்ள மோட்டார் வாகனத்தோடு தேவாரகோஷ்டி, பிரசங்கி எல்லோரும், போன சனியன்று, தியாகராஜநகரில், தக்கர்பாபா ஹரிஜனப் பள்ளியில். மேயர் ராயர் அவர்கள் தலைமையில், தங்கள் சேவையைச் செய்தார்கள். இந்தப் பிரசார முறையை மேயர்அவர்கள் பெரிதும் பாராட்டினார்கள்.

நாரதர், 14—7—48.

குறிப்புக்கள்

May humanity be benefited by the Religious Propaganda started by the Dharmapuram Adhinam and May Lord Siva bless His showerings.

"Kasimutt"
(Tiruppanandal)

Sri. S. JANARDHANAN PILLAY, B. A.,
Assistant Commissioner,
Hindu Religious Endowments, Tirunelveli.

It is with greatest pleasure that I receive the invitation for the inaugurating ceremony of the Religious Propaganda Van. As usual your Adhinam sets up another example in furthering our Religious Propaganda which is most necessary now. We in Tirunelveli District hope to be benefited much by the valuable service to religion you are inaugurating.

திரு. கீ. இராமலிங்க முதலியார் அவர்கள் M. A.,
திண்டுக்கல், நகராட்சி ஆணையாளர்.

திருத்தருமபுர ஆதீனத்தின் நெறிபரப்பு உந்தூர்தி 25-8-1948 காலை இந்நகருக்குவந்தது. மாலை 6-30 மணிக்கு இந்நகர அபிராமி அம்மன் கோயில் திருமணமண்டபத்தில் சொற்பொழிவுகள் நடந்தன. இவ்வூரின் பெரிய வழக்கறிஞரும் நாட்டுப் பணி

புரிந்து புகழ்பெற்றவரும் முன்னைய நகர மன்றத் தலைவருமான உயர்திரு. கி.குப்புசாமிஐயர் B.A.,B.L., அவர்கள் தலைமையமர்ந்தார்கள். இவ்வூர் அரசவழக்கறிஞர் திரு. பெ. கா. சண்முகநாதன் B.A., B.L., அவர்கள் கடவுள்நெறியைப் பொதுமக்கள் உணரும்படி எடுத்துக்கூற வேண்டியதின் தேவையை வற்புறுத்திப் பேசினார்கள்.

கூட்டத்தின் துவக்கத்தில் தருமை ஆதீனத்தின் பெருமை, அது செய்துவரும் அரியதொண்டு, ஆதீன முதல்வராகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருள்நெறி பரப்பு உந்தூர்தி அமைத்த சிறப்பு, பரப்புநர் குழுவின் தலைவர், மற்ற உறுப்பினர்களின் அறிவாற்றல் இவைகுறித்து எடுத்துக்கூறும் பேறு எனக்குக் கிடைத்தது. இறுதியில் யாவர்க்கும் நன்றி நவிலும் வாய்ப்பும் எனக்குக் கிட்டிற்று. வெல்க அருள் நெறி! வாழ்க தருமை ஆதீனம்!!

திரு. சாமிவேலாயுதம் பிள்ளை அவர்கள், B.A., L.T.

திருவாரூர் உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்.

சைவசமயப் பிரசாரம் பெரிதும் தேவையான இந்நாளில் இப்புதுமுறையில் அதாவது உந்தூர்தியின் வாயிலாக இறையொளிபரப்ப முன்வந்தது பெரிதும் போற்றத்தகுந்ததாகும். இவ்வூர்தியில் சென்று பணிசெய்யும் பேரன்பர்கள் ஆங்காங்குமுள்ள பல அன்பர்களை ஊக்கத்துடன் சேர்த்துக்

கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துவது பெரும் பயன் அளிக்கவல்லதாகும். இவ்வரிய முயற்சி நீடு விளங்க இறைவனை ஏத்துகின்றேன்.

திரு. செ. ரா. நாராயணசாமி பிள்ளை அவர்கள்,

திருவாரூர் நகராட்சி ஆணையாளர்.

இத்தகைய சமயப்பிரசாரம் மிகமிக அவசியம் என்பதை யாவரும் உணர்ந்தனர்.

தருமபுர ஆதீன சமயப்பிரசாரக் குழுவினர் ஏற்றுக்கொண்ட இப்பணி சாலவும் சிறப்புடைத்து. சைவசமயம் புத்துயிர்பெற்று எழும் என்பதில் ஐயம் இல்லை. அவர்கள் பணி வெற்றிபெற்று மக்கள் எல்லோரும் பயன்பெற்று உய்யுமாறு இறைவன் திருவருளை வேண்டுகிறேன்.

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி ஐயர் அவர்கள், B. A., L. T.,

போர்டு உயர்தரப்பள்ளித் தலைமையாசிரியர், நன்னிலம்.

This school had the special good fortune to be visited by the Travelling Propaganda Van of Sri Dharmapuram Adhinam.

The speeches were very much appreciated by the teachers and pupils and l feel that occasional visits of the propaganda van will go a long way to impress on the young pupils, the need for a religious faith. The authorities of the Mutt have to be congradulated upon this novel form of propaganda to restore the Hindu religion to its ancient glory.

112929

நெ	விபரம்.	ஜில்லா	தலைவர்	சொற்பொழிவாளர்	சொற்பொழிவு	மைல்கள்	இடம்
1.	19—8—48உ முதல் 3—9—48உ முடிய சுற்றுப்பிரயாணம்	தஞ்சை திருச்சிமதுரை.	8	68	70	520	15
2.	26—9—48உ முதல் 7—10—48உ முடிய சுற்றுப்பிரயாணம்	தென்னாற்காடு. ஜில்லா.	8	87	95	400	21
3.	21—11—48 உ முதல் 6—12—48உ முடிய சுற்றுப்பிரயாணம்	தஞ்சைஜில்லா காரைக்கால் உள்பட.	4	66	70	216	23
4.	10—12—48உ முதல் 14—12—48உ முடிய சுற்றுப்பிரயாணம்	மதுரைஜில்லா	5	8	13	542	5

திருக்குவளை மாசி மகஉத்ஸவம், திருகடவூர் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் ஜென்மநக்ஷத்திரவிழா, வைத்தீஸ்வரன்கோயில் ஆடிக்கிர்த்திகை, ஷை யூர் மண்டலாபிஷேககிர்த்திகை, மாயூரம் குமர கட்டளை கந்தசஷ்டிவிழா, திருவாரூர் தமிழ்த்திருநாள், சுவாமிமலை மகாசந்நிதானம் விஜயம். திருப்பனந்தாள் ஊருடையப்பர்கோயில் கும்பாபிஷேகம், வள்ளலார்கோயில் கடமுகம், சிதம்பரம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் விஜயம், சீகாழி திருமுலைப்பால் உற்சவம், திருநள்ளாறு சனிப்பெயற்சி முதலிய பல விழாக்களிலும் கலந்துகொண்டு பணிபுரிந்திருக்கிறது.

இவைகளுள்பட மொத்த சுற்றுப்பிரயாணமைல்கள் 2728

6A
9-85

பிரசாரவாகன வெளியீடுகள்:

1. நல்வழி.
2. இன்பம்.
3. அமைதி.
4. இந்துமதபாலபாடம்.
5. திருமுருகாற்றுப்படையும்-
   கோளறுதிருப்பதிகமும்.

ஞானசம்பந்தம் பதிப்பகம் தருமபுரம். C. 500. 3—10—49.